# மதுரை மாவட்டம்

## அரையாண்டுத் தேர்வு

வகுப்பு : 11 பாடம் : வரலாறு

விடைக்குறிப்பு

### பகுதி – I 20 X 1 = 10

1. அ) வரலாற்றுக்கு முந்தைய காலம்
2. இ) தூத்துக்குடி
3. ஈ) iv
4. இ) மகதம்
5. அ) இண்டிகா
6. ஈ) iv
7. அ) அரிக்கமேடு
8. அ) 4,3,1,2
9. ஆ) இராமபாலா் இராமசரிதத்தை எழுதினாா் .
10. ஈ) கம்போடியா
11. அ) சமஸ்கிருதம்
12. இ) கொற்கை
13. அ) பன்றி
14. அ) சூா்தாஸ்
15. இ) பீரங்கிப்படை
16. அ) மராத்தியா்
17. இ) பாரிஸ் உடன்படிக்கை
18. ஈ) ராபா்ட் கிளைவ் .
19. இ) புதிய தலைப்பாகை
20. இ) இராஜாராம்மோகன் ராய்

### பகுதி – II 7 X 2 = 14

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும் . வினா எண் 30 – க்கு கண்டிப்பாக விடையளிக்கவும் .

21. பெருங்குளம் :
    - முற்றத்துடன் கூடிய ஒரு பெரிய குளம்.
    - குளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள நடைபாதை வடக்கு , தெற்கு பக்கத்தில் படிகட்டுக்கள் அமைந்துள்ளது .
    - இதன் கட்டுமானங்கள் தானியக்கிடங்காகவும் , பெருங்குளமாகவும் அடையாளப்படுத்துகின்றன .

22. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து :
    - சமணத்தின் மையமான தத்துவம் “அஹிம்சை” .
    - சமணம் கடவுளின் இருப்பை மறுத்தது . தொடக்கத்தில் சமணத்தில் உருவ வழிபாடு கிடையாது .
    - எளிமையான ஒழுக்கமிக்க வாழ்க்கை மேற்கொள்வதன் மூலமாகவே ஒருவா் துன்பங்களிலிருந்து தப்ப முடியும் என்று சமணம் வலியுறுத்தியது .

23. பண்டமாற்று முறை :
    - விலையுயா்ந்த ஆபரணக் கற்களை பண்டமாற்றாகக் கொடுத்து மூலப் பொருள்களைப் பெற்றனா் .

- அம்மூலப் பொருள்கள் பல்வேறு பொருள்களாகத் தயார் செய்யப்பட்டு , பின்னர் வேறு சில பொருள்களுக்காகப் பண்டமாற்று செய்யப்பட்டன .
- வணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்தில் இருந்தது .

24. அலகாபாத் தூண் கல்வெட்டு :
- சமுத்திரகுப்தரின் ஆட்சி , அவரது ஆளுமை , சாதனைகள் ஆகியவற்றை விளக்குகிறது .
- இதனைப் பொறித்தவர் ஹரிசேனர் .
- இது 33 வரிகளில் நாகரி வரிவடிவத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது .

25. வைணவத்தை மாற்றிய ராமானுஜரின் பங்களிப்பு :
- ராமானுஜர் திருவரங்கம் கோவிலையும் , மடத்தையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்த அவர் பல பிரிவினரை ஒருங்கிணைத்தார் .
- திருவரங்கம் கோவில் சடங்குகளை மாற்றி அமைத்தார் .
- வைணவத்தின் சமூகத்தளத்தை விரிவடையச் செய்யும் நோக்கில் பிராமணர் அல்லாதோரையும் இணைத்துக் கொண்டார் .

26. பாண்டிய அரசின் மீதான மாலிக்காபூரின் படையெடுப்பின் விளைவுகள் :
- பாண்டிய அரசின் ஆட்சிப்பொறுப்பு பாண்டிய அரசக் குடும்ப உறுப்பினர்களால் தனித் தனியாகப் பிரித்துக் கொள்ளப்பட்டன .
- மதுரையில் தில்லி சுல்தானிய அரசுக்குக் கட்டுப்பட்ட ஓர் அரசு உருவாகியது .
- சொக்கநாதர் கோவிலை இடித்து ஏராளமான விலை மதிக்க முடியாத பொருள்களை மாலிக் காபூர் எடுத்துச் சென்றார் .

27. பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள் :
- இராமானுஜர் விசிஷ்டாத்வைதம் என்னும் தத்துவத்தை உருவாக்கினார் .
- அவருடைய போதனைகள் பரமாத்மாவும் , ஜீவாத்மாவும் இரண்டல்ல ஒன்றே என்ற ஆதிசங்கரரின் கருத்தை மறுத்தன .
- 11 ஆம் நூற்றாண்டில் ஒரு தத்துவ , சித்தாந்த இயக்கமாக மறுவடிவம் கொண்டது .

28. சரஸ்வதி மஹால் நூலகம் :
- நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது .
- மராத்திய அரசவையின் அன்றாட அலுவல்கள் பற்றிய ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன .
- 18 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு – மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து பற்றிய ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன .

29. 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் :
- வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒழுங்குமுறைச் சட்டத்தின் மூலமாக கவர்னர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டார் .
- கம்பெனி ஊழியர்களின் வரவுசெலவு கணக்கு பற்றி இயக்குநர் குழு பிரிட்டிஷ் கருவூலத்திற்கு தெரியப்படுத்துவது .
- ஆளுநரும் , தலைமைத் தளபதியும் , இரு ஆலோசகர்களும் கொண்ட குழு வருவாய் வாரியமாகச் செயல்பட்டது .

30. இராமலிங்க அடிகளார் :
- தேவார , திருவாசகப் பாடல்களால் ஈர்க்கப்பட்ட அவர் மனம் உருகும் பாடல்களைச் சொந்தமாக இயற்றினார் .
- அவர் சத்திய தர்ம சாலை ஒன்றை வடலூரில் நிறுவி ஏழைகளுக்கு உணவளிக்கத் தொடங்கினார் .
- தன்னைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்காக “சத்யஞான சபை”எனும் அமைப்பை நிறுவினார்.
- அவருடைய பாடல்களைத் திரட்டித் “திருவருட்பா” எனும் பெயரில் 1867 இல் வெளியிட்ட போது உச்சத்தை எட்டியது .

## பகுதி – III 7 X 3 = 21

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் . வினா எண் 40 – க்கு கண்டிப்பாக விடையளிக்கவும் .

31. ரிக்வேத கால சமூகப்பிரிவுகள் :

- புருஷ பலியிடப்பட்டபோது அவனுடைய வாயிலிருந்து பிராமணர்கள் தோன்றினர் .
- இரண்டு கைகளிலிருந்து சத்திரியர்கள் தோன்றினர் .
- தொடைகளிலிருந்து வைசியரும் , கால்களிலிருந்து சூத்திரர்களும் தோன்றியதாக கூறப்படுகிறது .
- தொழில் அடிப்படையில் போர் புரிவோர் , மதகுருமார்கள் , கால்நடை வளர்ப்போர் , வேளாண்மை செய்வோர் , சிகை அலங்காரம் செய்வோர் போன்றோரும் குறிப்பிடப்படுகின்றனர் .

32. இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்கள் :

- இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் கிரேக்க மாகாணங்கள் அமைவதற்கு இட்டுச் சென்றது .
- மேற்கு உலகிற்காக வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன .
- இந்தியாவிற்கும் , கிரேக்கத்திற்கும் இடையில் நேரடி வணிகத்தொடர்பு ஏற்பட்டது .
- இந்தியாவின் வடமேற்கில் பல கிரேக்கக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன

33. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவத்துவம் :

- நவீனத்துக்கு முந்தைய அனைத்துப் பொருளாதாரங்களிலும் பரிமாற்றத்துக்கு ஒரு முக்கிய ஊடகமாகப் பண்டமாற்றுமுறை விளங்கியிருக்கிறது .
- உப்பைப் பணத்துக்கு விற்காமல் ஏனைய பண்டங்களுக்காகவும் , இதர தேவைகளுக்காகவும் பண்டமாற்று செய்தனர் .
- நகர அங்காடிகள் குறித்து இலக்கியத்திலுள்ள சித்தரிப்புகளில் பணம்தான் பரிமாற்றத்துக்கான முக்கிய ஊடகமாக இருந்தது .

34. எல்லோராவின் நினைவுச்சின்னங்கள்

- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கைலாசநாதர் கோவிலாகும்.
- முதலாம் கிருஷ்ணரின் காலத்தில் அமைக்கப்பட்ட இக்கோவில் ஒரே பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டதாகும்.
- நடனமாடும் சிவன் ,விஷ்ணுவும் லட்சுமியும் இசையில் லயித்திருப்பது போன்ற சிற்பங்கள் உள்ளன.

எலிஃபெண்டாவின் நினைவுச்சின்னங்கள் :

- நடராஜர் , சதாசிவம் ஆகிய சிற்பங்கள் அழகிலும் கலை நுட்பத்திலும் சிறந்து விளங்குகின்றன.
- அர்த்த நாரீஸ்வரர் , மகேசமூர்த்தி ஆகியோரின் சிலைகள் புகழ் பெற்ற சிற்பங்களாகும்.
- மகேஷ்மூர்த்தியின் மூன்று முகங்கள் கொண்ட 25 அடி உயரமுள்ள மார்பளவுச்சிலை இந்தியாவில் உள்ள கவின்மிகு சிற்பங்களுள் ஒன்றாகும்.

35. மாலிக்காபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் :

- 1307 ஆம் ஆண்டு தேவகிரி கோட்டையைக் கைப்பற்றுவதற்காக மாலிக்காபூர் தலைமையில் ஒரு பெரும் படையை அலாவுதீன் அனுப்பினார்.
- காகதீய அரசர் பிரதாபருத்ரதேவா 1309 இல் தோற்கடிக்கப்பட்டார்.
- 1310 இல் ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரவல்லாளன் தோல்வியடைந்தார்.
- பிறகு மாலிக்காபூர் மதுரை , சிதம்பரம் , திருவரங்கம் ஆகிய கோவில் நகரங்களை சூறையாடினார்.

36. பாமினி அரசு :

- முகமது பின் துக்ளக் தன் தலைநகரை தில்லிக்கு மாற்றியபோது அவரின் தென்பகுதி மாநில மாகாண ஆளுநர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்தனர் .
- 1345 இல் வடக்கு கர்நாடகாவில் ஜாபர்கான் தன்னைச் சுதந்திர அரசராக அறிவித்துக் கொண்டு தன் தலைநகரை தேவகிரியிலிருந்து குல்பர்காவிற்கு மாற்றினார் .
- அவர் பாமன்ஷா என்ற பட்டத்தைச் சூடி பாமினி அரசவம்சத்தைத் தோற்றுவித்தார் .

37. தீன் இலாஹி :

- அக்பர் பல்வேறு மதங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற ஞானிகளுடன் விவாதங்களின் விளைவாக ஒரே ஒரு கடவுள் மட்டும் இருப்பதாக அவர் உணர்ந்தார் .
- அக்பருடைய தத்துவத்தை விளக்குவதற்கு அக்பரும் , பதானியும் பயன்படுத்திய சொல் “ தௌகித் - இ - இலாகி ” ( தீன் இலாகி ) என்பதாகும் .
- “ தௌகித் - இ - இலாகி ” என்ற சொல்லின் நேரடிப் பொருள் தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடாகும்

38. கிழக்குக் கடற்கரையில் ஐரோப்பியர் தங்களது குடியேற்றங்களை நிறுவக் காரணம் :

- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சந்தைகளில் இந்தியத் துணிகளுக்கு இருந்த உலகளாவிய தேவை .
- இந்தோனேசியத் தீவுகளில் சோழமண்டலக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த வண்ணம் பூசப்பட்ட துணிகளுக்கான தேவை.
- டச்சுக்காரரையும் , ஆங்கிலேயரையும் கிழக்குக் கடற்கரையில் தங்கள் நிறுவனங்களை அமைத்துக் கொள்ளச் செய்தது.

39. 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் :

- 1858 நவம்பர் 1 ல் விக்டோரியா ராணி வெளியிட்ட பேரறிக்கை கானிங்பிரபுவால் வாசிக்கப்பட்டது .
- அவரே இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் , முதல் வைஸ்ராயுமாவார் .
- இந்தியா ஆங்கிலேய முடியரசின் பெயரால் அரசு செயலர் மூலம் ஆளப்படும் எனக் கூறியது .
- சட்ட மன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் எனக் கூறியது .
- வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் , நாடிணைப்புக் கொள்கையும் கைவிடப்படும் எனக் கூறியது.

40. சுவாமி விவேகானந்தர் :

- சுவாமி விவேகானந்தர் "நவீன இந்தியாவின் விடிவெள்ளி" எனக் குறிப்பிடுகின்றார் .
- இவர் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்களுள் மிகவும் புகழ் பெற்றவர் .
- 1893 இல் அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெற்ற உலகச்சமய மாநாட்டில் பங்கேற்று ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியவர் .
- இராமகிருஷ்ண இயக்கத்தின் மூலம் பள்ளிகள் , மருத்துவமனைகள் , ஆதரவற்றோருக்கான இல்லங்கள் ஆகியவற்றை நிறுவினார் .
- வெளிநாடுகளில் இந்தியாவின் பாரம்பரியமிக்க நாகரிகத்திற்கு அங்கீகாரத்தைப் பெற்று தந்த முதல் இந்தியர் ஆவார் .

## பகுதி – IV 7 X 5 = 35

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் .

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா :

- எழுத்து முறை தோன்றுவதற்கு முந்தைய காலகட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் எனப்படுகிறது.
- கற்காலத்தில் இந்தியா , பாகிஸ்தான் , இலங்கை , நேபாளம் , வங்க தேசம் அடங்கிய தென்கிழக்கு ஆசியா முழுவதையும் குறிப்பதாகும் .
- வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் இந்தியாவில் 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரையான ஆண்டுகளுக்கு முன்பே இருந்தார்கள் எனத் தெரிகிறது .
- எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் கற்காலம் , வெண்கலக்காலம் , இரும்புக்காலம் எனப் பிரிக்கப்படுகிறது
- வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங்கற்காலம் எனப்படுகிறது .
- இதனை கீழ்ப்பழங்கற்காலம் , இடைப்பழங்கற்காலம் , மேல்பழங்கற்காலம் எனப் பிரிக்கப்படுகிறது

அல்லது

ஆ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் :

- ரிக்வேத கால அரசுமுறை என்பது இனக்குழு சமூகத்தின் அரசியலே ஆகும் .
- அரசர் ராஜன் என்றழைக்கப்பட்டார் .
- ராஜன் ஒரு பாரம்பரியத் தலைவனாவார் .
- சபா , சமிதி , விததா , கணா என்ற அமைப்புகள் செயல்பட்டன .
- சமிதி என்பது மக்கள் கூடும் இடமாகும் . விததா என்பது இனக்குழுக்களின் அமைப்பாகும் .
- சபா , விததா க்களில் பெண்கள் பங்கேற்றனர் .
- மதகுருமார்கள் அரசருக்கு அறிவுரை வழங்கினர் .
- சேனானி என்பவர் படைத் தலைவராவார் .
- நிலப்பரப்பைக் கட்டுப்படுத்திய அதிகாரி விராஜபதி எனப்பட்டார் .
- கிராமங்களின் தலைவர் கிராமணியே ஆவார் .

42. அ) புத்தரின் எண் வழிப்பாதை :

- நன்னம்பிக்கை , நல்ஆர்வம் , நல்வாய்மை , நற்செயல் , நல்வாழ்க்கை , நன்முயற்சி , நற்சிந்தனை , நல்ல தியானம் ஆகியவை புத்தரின் எண்வழிப் பாதையாகும்.
- புத்தர் கடவுள் பற்றிக் குறிப்பிடவோ , பேசவோ இல்லை .
- அவர் கடவுளின் இருப்பை ஏற்கவும் இல்லை , மறுக்கவும் இல்லை .
- பௌத்தம் சாதி முறையை ஏற்கவில்லை . சமத்துவத்தை வலியுறுத்தியது .
- அனைவரிடத்திலும் அன்பையும் , அஹிம்சையையும் போதித்தது .
- பௌத்தம் வீணடிப்பதற்கு எதிரானது , அது வணிகத்தையும் ,சிக்கனத்தையும் ஆதரித்தது .
- ஆயுதங்கள் , உயிருள்ள ஜீவன்கள் , இறைச்சி , மது , விஷம் ஆகியவற்றை விற்பனை செய்வதை அனுமதிக்கவில்லை .

அல்லது

ஆ) மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகள் :

- இலங்கையில் கிடைத்த , பாலி மொழி நூலான மகாவம்சம் மௌரியப் பேரரசு பற்றி அறிய உதவும் சான்றாகும்.
- தொல்லியில் அகழாய்வுகளின் மூலம் நகரத்தின் அமைப்பு , கட்டிடங்களின் கட்டுமானம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது.
- கங்கைப் பகுதியின் தொல்லியில் கண்டுபிடிப்புகள் , அப்பகுதியில் உருவான நகர மையங்களின் தன்மை குறித்த நம்பகமான சான்றுகளைத் தந்துள்ளன.
- 1837 இல் ஜேம்ஸ் பிரின்செப் சாஞ்சியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் இருந்த பிராமி எழுத்துகளின் பொருளைக் கண்டுபிடித்தார்.
- சிந்துவெளி நகரங்களான ஹரப்பா ,மொகஞ்சதாரோ இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான தொல்லியல் பொருள் .
- புராணங்களும் , பௌத்த இலக்கியங்களும் அசோகர் என்ற ஒரு சக்ரவர்த்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளன.
- 1915 இல் தேவனாம்பிய பியதசி எனும் அந்த அரசர் அசோகர் தான் என உறுதிசெய்யப்பட்டது.

43. களப்பிரார் : ( பொ .ஆ 300 -600 )

- சங்ககாலத்திற்கும் ,பல்லவர் , பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே களப்பிரர் காலமாகும் .
- போர்க்குணம் மிக்க களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி மூவேந்தர்களையும் தோற்கடித்து இடைக்கால ஆட்சியை ஏற்படுத்தினர் .
- திருக்குறள் , பதினென் கீழ்க் கணக்கு ஆகிய நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டன .
- சிலப்பதிகாரம் , மணிமேகலை ஆகிய காப்பியங்கள் இக்காலத்தைச் சார்ந்தது .
- இக்காலத்தில் சமண , பௌத்த மதங்கள் பெரும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன .

களப்பிரார் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டு :

- 5 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிச் சேர்ந்த கல்வெட்டுகளில் ஒன்று சேந்தன் , கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது .
- அவர்களின் குடும்பத்தை வம்சாவளி என குறிப்பிடபடாவிட்டாலும் சில அறிஞர்கள் அவர்களைக் களப்பிர அரசர்கள் எனக் கருதுகின்றனர் .
- 6 ஆம் நூற்றாண்டில் களப்பிரர்கள் ஆட்சி பாண்டியர்களால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகத் தெரிகிறது .

அல்லது

ஆ) “குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்” :

- குடைவரைக் கோவில்கள் அஜந்தா , எல்லோரா, பாக் மற்றும் உதயகிரி குகை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- மிகச் சிறந்த ஸ்தூபிகள் கமத் , ரத்தினகிரி , மிர்பூர்கான் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- சாரநாத்தில் காணப்படும் நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிலை , உதயகிரி குகையின் நுழைவாயிலில் இருக்கும் வராஹ அவதாரச் சிலை ஆகியவை கல் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்றாகும்.
- குப்தரின் சுவரோவியங்கள் அஜந்தா , பாக் , பாதாமி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- காளிதாசர் எழுதிய சாகுந்தலம் , மாளவிகாக்னிமித்ரம் ', விகரமோர்வசியம் ஆகியவை அவரது புகழ்பெற்ற நாடகங்கள்.
- நாளந்தா பல்கலைக்கழகம் பொ.ஆ 5 ஆம் நூற்றாண்டிலிருந்து 1200 வரை புகழ்பெற்ற கல்விச்சாலையாகும்.
- சூரிய சித்தாந்தா என்ற நூலில் ஆரியபட்டர் சூரிய கிரகணங்களின் உண்மையான காரணங்களை ஆராய்ந்தார்.

➢ பூமி ஒரு அச்சில் தன்னைத் தானே சுற்றுகிறது என்பதைக் கண்டுபிடித்தவர் ஆரியபட்டர் .

44. அ) ஹர்ஷவர்த்தனர் பேரரசின் எல்லைகளை இந்திய வரைபடத்தில் குறித்து அதில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

i) தானேசுவரம் ii) இந்திரபிரஸதம் iii) கன்னோசி iv) நாளந்தா v) புத்தகயா



அல்லது

ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை :

- மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் ராஜவசிம்மனின் ( பொ.ஆ 700 – 728 ) ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும் .
- இக்கோவில் மூன்று கருவறைகளைக் கொண்டுள்ளது . அவற்றில் முக்கியமாவை சிவனுக்கும் , விஷ்ணுவுக்கும் படைத்தளிக்கப்பட்டுள்ளன .
- தென்னிந்தியாவில் கட்டுமானக் கோவில்களில் இது முதன்மையானதாகும் .
- இக்கடற்கரைக் கோவில் பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோவிலாகும் .
- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் மாமல்லபுர பல்லவர் கோவில்களின் சிறப்புப் பண்பாகும் இங்குள்ள ஒற்றைக்கல் தேர்கள் பஞ்சபாண்டவர் ரதம் என அறியப்படுகின்றன .
- மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள கலை வெளிப்பாட்டில் மிக முக்கியமானது கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கி வரும் ஆகாய கங்கை காட்சியாகும் .

45. அ) முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு :

- விஜயநகர அரசுடன் நீண்டகாலப் போர்களை மேற்கொண்டார் .
- 1363 இல் வாரங்கல் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார் .
- கோல்கொண்டா கோட்டை அவர் வசமானது . அங்கிருந்த கருவூலங்கள் , ரத்தினக்கற்கள் பாமினி அரசின் வசமாயின .
- முதலாம் முகமது சிறந்த அரசு முறை நிர்வாகத்தைப் பின்பற்றினார்.
- எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார் .
- வகில் - உஸ் - சுல்தானா --- படைத்தலைவர்
- வசீர் - இ - குல் --- மற்ற அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிடுபவர்
- அமீர் - இ - ஜும்லா --- நிதியமைச்சர்
- வசீர் - இ - அஷ்ரப் --- வெளியுறவு அமைச்சர் .
- நசீர் --- நிதித்துறை இணையமைச்சர்
- பேஷ்வா --- அரசுப் படைகளின் பொறுப்பாளர்
- கொத்வால் --- காவல்துறைத் தலைவர்
- சதர் -இ - ஜஹான் --- தலைமை நீதிபதி

அல்லது

ஆ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகள் :

- பக்தி இயக்கச் சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர் .
- இறைவனிடம் ஆழமான பற்றும் , நம்பிக்கையும் கொள்வதன் மூலம் முக்தி அடைய முடியும் எனும் கருத்தை முன்வைத்தனர் .
- இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்பை வற்புறுத்தினர் .
- குருவானவர் வழிகாட்டியாகவும் , ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும் .
- உலக சகோதரத்துவம் எனும் கொள்கையைப் போதித்தனர் .
- உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர் .
- ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாட வேண்டுமென வலியுறுத்தினர் .
- சடங்குகள் , சம்பிரதாயங்கள் , புனிதயாத்திரைகள் , நோன்புகள் ஆகியவற்றைக் கண்டனம் செய்தனர் .

46. அ) வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா :

- “விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான்” என ஷெர்ஷா நம்பினார் .
- நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார் .
- நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது .
- சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும் , ஜமீன்தாரி முறையும் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன .
- வேறு பல இடங்களில் மொத்த வேளாண் விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு மட்டும் வரியாக வசூலிக்கப்பட்டது .
- வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார் .
- நுழைவு வரி , விற்பனை வரி ஆகியவை மட்டுமே வசூலிக்கப்பட்டன .
- தங்க , வெள்ளி , செப்புக் காசுகளில் இடம் பெறும் உலோகங்களின் தரஅளவு வரையறை செய்யப்பட்டது .

அல்லது

ஆ) முகலாய அரசர்களின் காலவரிசையை காலக்கோடிட்டுக் காட்டுக.

## முகலாய அரசர்கள்

1. பாபர் (1526-1530)
2. ஹுமாயூன் (1530-1540)
3. அக்பர் (1556-1605)
4. ஜஹாங்கீர் (1605-1627)
5. ஷாஜகான் (1627-1658)
6. ஔரங்கசீப் (1658-1707)

47.அ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டம் :

- வெல்லெஸ்லி துணைப்படைத் திட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை விரிவாக்கினார் .
- ஹைதராபாத் , மைசூர் , லக்னோ , மராத்திய பேஷ்வா , போன்ஸ்லே , சிந்தியா போன்ற அரசு மற்றும் அரசர்களை அதன் கீழ்க்கொண்டு வந்தார் .
- இந்திய ஆட்சியாளர் தனது சொந்த படைகளை கலைக்க வேண்டும் .
- பிரிட்டிஷ் படைகளுக்கான பராமரிப்புச் செலவை ஏற்க வேண்டும் .
- பாதுகாப்புக்கு உட்பட்ட அரசர் பிற ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்பைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் .
- பிரெஞ்சு நிர்வாகத்தோடு தொடர்பு இருக்கக் கூடாது .
- பிற இந்திய அரசுகளோடு கம்பெனியின் அனுமதியில்லாமல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடாது .
- எந்த அரசும் பிற அரசுகளின் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிடக்கூடாது .

அல்லது

ஆ) 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்கள் :

- டல்ஹௌசி வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் மூலமாக அவத்தையும் , ஜான்சியையும் இணைத்தார் .
- அவத்தில் அரச குடும்பத்தின் ஆதரவை நம்பியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ,ஆடைகள் , காலணிகள் , நகைகள் ஆகியவற்றைத் தயாரிப்போர் வாழ்விழந்தனர் .
- ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாகக் கருதினர் .
- காலனியரசு கடனைக் குறைக்கவோ , நிவாரணம் வழங்கவோ முன்வராத சூழலில் சிறு விவசாயிகளும் , குத்தகைகாரர்களும் கடுந்துயரங்களுக்கு உள்ளாயினர் .
- துப்பாக்கித் தோட்டாக்களில் பசு , பன்றியின் கொழுப்பு தடவப்பட்ட செய்தி இந்து , முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன .

1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான விளைவுகள் :

- 1858 நவம்பர் 1 ல் விக்டோரியா ராணி வெளியிட்ட பேரறிக்கை கானிங்பிரபுவால் வாசிக்கப்பட்டது .
- அவரே இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் , முதல் வைஸ்ராயுமாவார் .
- இந்தியா ஆங்கிலேய முடியரசின் பெயரால் அரசு செயலர் மூலம் ஆளப்படும் எனக் கூறியது .
- சட்ட மன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் எனக் கூறியது .
- வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் , நாடிணைப்புக் கொள்கையும் கைவிடப்படும் எனக் கூறியது.

www.Padasalai.Net